வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 5.4.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

வாக்குப் பதிவு சதவிகிதம் குறைவாக உள்ள மாநிலங்களின் தேர்தல் அதிகாரிகளுடன், தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் இன்று புதுடெல்லியில், ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

இந்தியா, முன்னேறிய நாடாக மேம்பட வேண்டும் என்ற தீர்மானத்துடன், ஒருங்கிணைந்து பாடுபட்டு வருவதாக, பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மக்களவைத் தேர்தலுக்கான காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில், மாநிலங்களின் விருப்பப்படி நீட் தேர்வு உட்பட பல்வேறு வாக்குறுதிகள், இடம் பெற்றுள்ளன.

ரிசர்வ் வங்கி இன்று வெளியிட்டுள்ள பணக் கொள்கையில், ரெப்போ வட்டி விகிதம் மாற்றப்படாமல், ஏற்கனவே உள்ள அதே அளவில், 6.5 சதவிகிதமாக மீண்டும் அறிவிக்கப் பட்டுள்ளது.

தேர்தல் ஆணையம்

குறைவான வாக்குப் பதிவை சரிப்படுத்துவது குறித்து தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் இன்று புதுடெல்லியில், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களின் மாவட்ட தேர்தல் அதிகாரிகள், மற்றும், நகராட்சி ஆணையர்களுடன், ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். வாக்குப் பதிவு சதவிகிதம் குறைவாக உள்ள மாவட்டங்களின் தேர்தல் அதிகாரிகள், வாக்காளர்கள் நடந்து கொள்ளும் விதத்தை மாற்றுவதன் மூலம் வாக்குப் பதிவை அதிகரிப்பது குறித்து, வாக்குச் சாவடி வாரியான செயல் திட்டங்களை உருவாக்க வேண்டுமென அவர் அறிவுறுத்தினார். ஜனநாயக திருவிழாவாம் தேர்தலில் பங்கேற்பது எத்தனை கவுரவம் என்பதை அதிகாரிகள் மக்களுக்கு புரிய வைக்க வேண்டும் என்றும், மக்கள் தன்முனைப்புடன் வாக்களிப்பதை உறுதிப்படுத்த, இத்தகைய முயற்சிகள் அவசியம் என்றும் அவர் கூறினார். வாக்குச் சாவடிகளில் வாக்காளர்கள்

வரிசையில் நின்று வாக்களிக்கத் தேவையான வசதிகளை மேம்படுத்துதல், வாக்காளர்களைத் தேடிச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்துதல், இப்பணிகளுக்கு இளைஞர் செல்வாக்கு மற்றும் உள்ளூர் பிரபலங்களை பயன்படுத்திக் கொள்ளுதல் ஆகிய மும்முனை உத்திகளை தலைமை தேர்தல் ஆணையர் வலியுறுத்தினார். நகர்ப் புறங்கள் மற்றும் கிராமப் புறங்களில் வாக்குப் பதிவை அதிகரிக்க, தனித் தனி உத்திகள் அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

டெல்லி, மும்பை, சென்னை பெங்களூரு, ஐதராபாத், அகமதாபாத் உள்ளிட்ட நகரங்களின் நகராட்சி அதிகாரிகளும், உத்தரபிரதேஷ் மற்றும் பீகார் மாநிலத்தின் குறிப்பிட்ட சில மாவட்ட தேர்தல் அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். தமிழ்நாடு, கர்நாடகா, குஜராத் உள்ளிட்ட மாநிலங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகள் மெய்நிகர் முறையில் கூட்டத்தில் பங்கேற்றனர்.

நாட்டில் வாக்குப் பதிவு சதவிகிதம் குறைவாக உள்ள, 215 கிராமப்புற மக்களவைத் தொகுதிகளையும், 51 நகர்ப்புற மக்களவைத் தொகுதிகளையும் தேர்தல் ஆணையம் கண்டறிந்து இத்தொகுதிகளில் வாக்குப் பதிவு சதவிகிதத்தை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

*பரிசீலனை*

கேரளா-கர்நாடகா உட்பட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 88 மக்களவைத் தொகுதிகளில், வரும் 26-ஆம் தேதி நடைபெற உள்ள இரண்டாம் கட்ட மக்களவை தேர்தலுக்கான வேட்புமனு பரிசீலனை இன்று நடைபெற்றது. ஏற்றப்பட்ட மனுக்களை விலக்கிக் கொள்ள, வரும் திங்கட்கிழமை கடைசி நாளாகும். ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் வேட்புமனு பரிசீலனை நாளை நடைபெற உள்ளது. இதற்கிடையே, 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 94 தொகுதிகளுக்கு, மே 7-ஆம் தேதி நடைபெற உள்ள, 3-ஆம் கட்ட மக்களவை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல், வரும் 12-ஆம் தேதி தொடங்க உள்ளது.

மோடி-ராஜஸ்தான்

இந்தியா, முன்னேறிய நாடாக மேம்பட வேண்டும் என்ற தீர்மானத்துடன் ஒருங்கிணைந்து பாடுபட்டு வருவதாக பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று ராஜஸ்தான் மாநிலம் ஷெகாவதி பிராந்தியத்தில், பிஜேபி வேட்பாளர்களுக்கு ஆதரவாக தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் நாட்டில் நீண்டகாலமாக நிலுவையில் இருந்த, மக்களின் பல அடிப்படைத் தேவைகளை, கடந்த 10 ஆண்டுகளில், தமது அரசு தான் நிறைவேற்றி இருப்பதாகவும், வீடு, கழிப்பறை, குடிநீர் உள்ளிட்ட வசதிகள் தற்போது இயக்க ரீதியில் மேம்படுத்தப் படுவதாகவும் கூறினார். கொரோனா உள்ளிட்ட நெருக்கடிகளையும் மீறி, உலகின் 5-ஆவது பெரிய பொருளாதாரமாக இந்தியா மேம்பட்டுள்ளதாகவும், 10 ஆண்டுகளுக்கு முன்னர் விரக்தியில் மூழ்கி இருந்த ஒரு நாடு தற்போது இவ்வளவு வேகமாக முன்னேறி வருவதைக் கண்டு, உலகமே வியப்பதாகவும் அவர் தெரிவித்தார். கடந்த 10

ஆண்டுகளில் அரசு நிறைவேற்றி உள்ள பணிகள், வெறும் முன்னோட்டம் மட்டுமே என்று பிரதமர் கூறினார். வரவிருக்கும் ஆண்டுகளில் இன்னும் பல பெரிய பணிகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். எதிர்கட்சிகளை கடுமையாக சாடிய திரு நரேந்திர மோடி தீவிரவாதிகள் மீது, இந்தியா, வான் தாக்குதல் மற்றும் துல்லிய தாக்குதல் நடத்திய போது, அதற்கு ஆதாரம் கேட்டவர்கள் தான் எதிர்கட்சிகள் என்றார்.

மக்களவை தேர்தலுக்கான காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை இன்று வெளியிடப்பட்டுள்ளது. கட்சித் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, மற்றும், திருமதி சோனியாகாந்தி உள்ளிட்ட, கட்சியின் மூத்த தலைவர்கள், புதுடெல்லியில், தேர்தல் அறிக்கையை வெளியிட்டனர். மாநிலங்களின் விருப்பப்படி நீட் தேர்வு, மாணவர்களின் கல்விக் கடன் ரத்து, அரசு வேலை வாய்ப்பில் பெண்களுக்கு 50 சதவிகித இடஒதுக்கீடு, 100 நாள் வேலை திட்ட ஊதியம் 400 ரூபாயாக உயர்வு உள்ளிட்ட வாக்குறுதிகள், காங்கிரஸ் தேர்தல்

அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. இதற்கிடையே, மக்களவை தேர்தலுக்கான பாரதிய ஜனதாவின் தேர்தல் அறிக்கையை இறுதி செய்யும் பணிகளில், அக்கட்சியின் தேர்தல் அறிக்கை குழு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

*ரிசர்வ் வங்கி*

ரிசர்வ் வங்கி இன்று வெளியிட்டுள்ள, 2 மாதங்களுக்கான பணக் கொள்கையில், ரிசர்வ் வங்கியால் இதர வங்கிகளுக்கு வழங்கப்படும் குறுகிய கால கடன் மீதான ரெப்போ வட்டி விகிதம் மாற்றப்படாமல், ஏற்கனவே உள்ள அதே அளவில், 6.5 சதவிகிதமாக மீண்டும் அறிவிக்கப் பட்டுள்ளது. ரெப்போ விகிதம் மாற்றப்படாமல் நீடிப்பது, தொடர்ச்சியாக இது 7-ஆவது முறையாகும். மும்பையில் நடைபெற்ற பணக் கொள்கைக் குழுவின் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டதாக ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்தி காந்த தாஸ், இன்று மும்பையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். வட்டி விகிததங்களை குறைக்கும் போக்கை விலக்கிக் கொள்வதில் கவனம் செலுத்துவதன் மூலம், பணவீக்கம், இலக்கை நோக்கியதாக

அமைவதை உறுதிப்படுத்த, பணக் கொள்கை குழு, முடிவு செய்திருப்பதாக அவர் கூறினார்.

2024-25-ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி, 7 சதவிகிதமாக இருக்கும் என்றும், பருவமழை இயல்பாக அமைந்தால், நுகர்வோர் விலை குறியீட்டு எண் அடிப்படையிலான பணவீக்கம் 4.5 சதவிகிதமாக இருக்கும் என்றும், மதிப்பிடப் பட்டுள்ளதாக, ரிசர்வ் வங்கி ஆளுநர் தெரிவித்தார். தற்போது பணவீக்கம் கணிசமாக குறைந்துள்ள போதிலும், அரசின் 4 சதவிகித இலக்கை விட அதிகமாகவே உள்ளதாகவும், உணவுப் பணவீக்கத்தில் கடும் ஏற்றத் தாழ்வுகள் நீடிப்பதால், பணவீக்கம் குறையும் போக்கு தடைப் படுவதாகவும் அவர் கூறினார்.

*யுபிஐ*

வங்கிக் கணக்கில் பணம் போடுவதற்கான ரொக்க டெபாசிட் இயந்திரங்களில், யுபிஐ மூலம் ரொக்கப் பணம் டெபாசிட் செய்யப்படுவதை ரிசர்வ் வங்கி விரைவில் அனுமதிக்க உள்ளது. தற்போது வங்கி கணக்கில் இருந்து பணம் எடுக்கவும்,

வேறு கணக்குகளுக்கு பணம் மாற்றவும் யுபிஐ பயன்பட்டு வரும் நிலையில், யுபிஐ மூலமான புதிய டெபாசிட் வசதியால் வங்கி வாடிக்கையாளர்கள் மேலும் பயன் பெறுவார்கள் என்று, ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்தி காந்த தாஸ் தெரிவித்துள்ளார். மூன்றாம் தரப்பு யுபிஐ செயலிகளின் வேலட்-டிலிருந்து, சிறு செலவுகளுக்கு, யுபிஐ மூலம் பணம் செலுத்தும் வசதியை அறிமுகப்படுத்தவும், ரிசர்வ் வங்கி உத்தேசித்துள்ளது. வங்கி அல்லாத பணப் பட்டுவாடா அமைப்புகளாலும் அணுகத் தக்கதாக, ரிசர்வ் வங்கியின் CBDC டிஜிட்டல் நாணயம், மாற்றப்பட்டு வருவதாகவும், ரிசர்வ் வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

*பரிசளிப்பு*

புதுச்சேரி வானொலி நிலையத்தின் மண்டல செய்திப் பிரிவும், புதுச்சேரி அலுவலர் அலுவலகமும் இணைந்து நடத்திய, தேர்தல் விழிப்புணர்வு தமிழ் வாசகப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, இன்று, தலைமைத் தேர்தல் அலுவலர் திரு ஜவகர், பரிசுகளை வழங்கினார். மக்களவைத் தேர்தல் இம்முறை

புதுச்சேரியில், பசுமைத் தேர்தலாக அமையும் வகையில், வாக்குப் பதிவு நாளன்று, புதுச்சேரி வாக்காளர்கள் வாக்குச் சாவடிக்கு நடந்து வந்து வாக்களிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். ரெட்டியார் பாளையத்தில் உள்ள தேர்தல் துறை அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், துணைத் தலைமை தேர்தல் அலுவலர்கள் திரு தில்லைவேல்-திரு ஆதர்ஷ், புதுச்சேரி வானொலி நிலைய செய்திப் பிரிவுத் துணை இயக்குநர் முனைவர் சிவக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தாகூர் அரசுக் கலை-அறிவியல் கல்லூரியின் உதவி தமிழ்ப் பேராசிரியர் முனைவர் விஜயராணி, வானொலி நிலையத்தின் நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள் திருமதி எலிசபெத்-திரு செந்தில் குமார் ஆகியோர் அடங்கிய நடுவர் குழுவினர், பரிசுக்குரிய வாசகங்களை தேர்ந்தெடுத்து இருந்தனர். முதல் பரிசு 3 ஆயிரம் ரூபாய், திரு வை சத்தியமூர்த்திக்கு வழங்கப்பட்டது. 2-ஆம் பரிசாக தலா 2 ஆயிரம் ரூபாய் திரு முத்துக் கருப்பன்- திரு இளம்பரிதி ஆகியோருக்கும், 3-ஆம் பரிசாக தலா ஆயிரம் ரூபாய்,

திரு துரைராஜன்-திருமதி அம்பிகா தேவி-திருமதி லோகேஷ்வரி ஆகியோருக்கும் வழங்கப்பட்டன.

*ஜெகஜீவன் ராம்*

புதுச்சேரியில், பாபு ஜெகஜீவன் ராம் பிறந்த நாள் அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது. லாஸ்பேட் ஏர்போர்ட் சாலையில், தாகூர் கலைக் கல்லூரியின் பின்புற நுழைவு வாயில் அருகே அமைந்துள்ள ஜெகஜீவன் ராம் சிலைக்கு, செய்தி-விளம்பரத் துறை இயக்குநர் திரு தமிழ்ச்செல்வன், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

*சிறப்பு ரயில்*

கோடை விடுமுறையை முன்னிட்டு சென்னை எழும்பூர்-நாகர்கோவில் இடையே, வந்தேபாரத் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது. இன்று முதல் வரும் 28-ஆம் தேதி வரை, வெள்ளி-சனி-ஞாயிற்றுக் கிழமைகளில், திருச்சி-திண்டுக்கல்-மதுரை-விருதுநகர்-திருநெல்வேலி வழியாக, இந்த சிறப்பு ரயில்கள் இயக்கப்படும்.

*ஐபிஎல்*

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு ஐதராபாத்தில் நடைபெறும் போட்டியில், சென்னை-ஐதராபாத் அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு, குஜராத்-பஞ்சாப் அணிகளுக்கு இடையே அகமதாபாத்தில் நடைபெற்ற போட்டியில், பஞ்சாப் அணி, 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 29 பந்துகளில் 61 ரன் அடித்து ஆட்டம் இழக்காமல் இருந்த, பஞ்சாப் அணியின் சஷாங்க் சிங், ஆட்ட நாயகமான அறிவிக்கப்பட்டார்.

*வானிலை*

கிழக்கு மற்றும் தீபகற்ப இந்தியாவின் பல்வேறு பகுதிகளில், 2 நாட்களுக்கு வெப்ப அலை வீசும் என இந்திய வானிலை ஆய்வுத் துறை தெரிவித்துள்ளது. ஒடிசா, மேற்குவங்கம், ஜார்கண்ட், மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா மற்றும் புதுச்சேரியில் நாளை வரை வெப்ப அலை வீசும் என்றும் கேரளா, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் அதிகமுள்ள வானிலை நீடிக்கும் என்றும்

தெரிவிக்கப்பட்டுள்ளது. வடகிழக்கு பிராந்தியத்தில் வரும் 9-ஆம் தேதி வரை, கூடுதல் மழை பொழிவு இருக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*நீதிமன்றம்-மதரசா*

உத்தரபிரதேச அரசின் மதரசா கல்வி வாரிய சட்டம் அரசியல் சாசனத்திற்கும் மதசார்பின்மைக்கும் எதிரானது என்று, கடந்த மாதம் அலகாபாத் உயர்நீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்பை, இன்று உச்சநீதி மன்றம் நிறுத்தி வைத்துள்ளது. உச்சநீதிமன்ற தீர்ப்பை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீது மத்திய அரசுக்கும் உத்தரபிரதேச மாநில அரசுக்கும் நோட்டீஸ் அனுப்ப தலைமை நீதிபதி திரு சந்திரசூட் தலைமையிலான 3 நீதிபதிகள் அமர்வு இன்று உத்தரவிட்டது.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

**வாக்குப் பதிவு சதவிகிதம்** குறைவாக உள்ள மாநிலங்களின் தேர்தல் அதிகாரிகளுடன், தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் இன்று புதுடெல்லியில், ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

இந்தியா, முன்னேறிய நாடாக மேம்பட வேண்டும் என்ற தீர்மானத்துடன், ஒருங்கிணைந்து பாடுபட்டு வருவதாக, பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மக்களவைத் தேர்தலுக்கான காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையில், மாநிலங்களின் விருப்பப்படி நீட் தேர்வு உட்பட பல்வேறு வாக்குறுதிகள், இடம் பெற்றுள்ளன.

ரிசர்வ் வங்கி இன்று வெளியிட்டுள்ள பணக் கொள்கையில், ரெப்போ வட்டி விகிதம் மாற்றப்படாமல், ஏற்கனவே உள்ள அதே அளவில், 6.5 சதவிகிதமாக மீண்டும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 5.4.2024/Script.

*ஆம்-ஆத்மி (13)*

டெல்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜரிவால் சதி திட்டம் காரணமாகவே சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக மூத்த ஆம் ஆத்மி தலைவர் திரு சஞ்சய் சிங் குற்றம் சாட்டி உள்ளார். இன்று

புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் திரு அரவிந்த் கெஜரிவாலுக்கு எதிராக வாக்கு மூலம் அளிக்க, நாடாளுமன்ற உறுப்பினர் திரு மாகுண்ட ரெட்டிக்கு நெருக்குதல் கொடுக்கப்பட்டதாகவும், அவர் மறுத்து விட்டதைத் தொடர்ந்து, அவரது மகன் ராகவ் ரெட்டி, கைது செய்யப்பட்டதாகவும் குற்றம் சாட்டினார். இதற்கிடையே, டெல்லி பிஜேபி தலைவர் திரு வீரேந்திர சச்தேவா, புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், டெல்லி அரசின் மதுபானக் கொள்கை தொடர்பாக, ஆம் ஆத்மி தலைவர்கள், தவறான தகவல்களை, தொடர்ந்து வெளியிட்டு வருவதாக கூறினார். டெல்லி அரசின் மதுபானக் கொள்கை சரியானதே என்றால், டெல்லி அரசே அதை மாற்றியது ஏன் என்றும் அவர் வினவினார்.